# சபரகமுவ மாகாண கல்வி, தகவல் தொழிநுட்ப மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

## சபரகமுவ மாகாணத்தின் மாகாண சபைப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் பதவி வெற்றிடங்களுக்காக (க.பொ.த.(உ .தர)) இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பின் 1 (அ) தரத்திற்கு பட்டதாரிகளைச் சேர்த்துக் கொள்ளல் - 2023.

சபரகமுவ மாகாணத்தின் மாகாண சபைப் பாடசாலைகளில் நிலவுகின்ற, 1 ஆம் இலக்க அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாடத்துறைகளுக்கு (க.பொ.த. (உ .தர) மற்றும் 13 ஆண்டு கால தொடர்ச்சியான கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான பாடங்களுக்காக) தொடர்புடைய சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரியர் பதவி வெற்றிடமாகவுள்ள பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு நிரப்புவதற்காக 23/1139/607/096 இலக்கமும் 2023.07.10 திகதியுமுடைய அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, 1885/38 இலக்கமும் 2014.10.23 திகதியுமுடைய இலங்கை ஆசிரியர் சேவைக் கட்டமைப்பின் ஏற்பாடுகளின் பிரகாரமும் அத்துடன் கல்வி அமைச்சின் செயலாளரின் ED/02/29/21/AL/02-vi இலக்கமுடைய தொகுதி மற்றும் 2023.07.24 ஆம் திகதியுமுடைய கடிதத்தின் ஆலோசனைகளின்படி, இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய சபரகமுவ மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கின்ற பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**முக்கியம் :-** தமிழ் மொழிமூல பதவி வெற்றிடங்களுக்காக தகைமைகளையுடைய போதியளவு எண்ணிக்கையான விண்ணப்பதாரிகள் சபரகமுவ மாகாணத்திலிருந்து தேர்ந்தெடுத்துக் கொள்ள இயலாமல் இருந்தால் மாத்திரம், சபரகமுவ மாகாணத்தில் ஆகக் குறைந்தது 08 வருடங்கள் சேவை புரிவதற்கு இணக்கத்துடன் நாடுதழுவிய மட்டத்தில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கின்ற விண்ணப்பதாரிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும். ஆகையினால் தமிழ் மொழிமூல பதவி வெற்றிடங்களுக்காக மாத்திரம் நாடுதழுவிய மட்டத்தில் விண்ணப்பங்கள் கோரப்படும்.

1) **பொதுத் தகைமைகள் :-**

i. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் வேண்டும்.

ii. நல்லொழுக்கமும் சிறந்த தேகாரோக்கியம் மற்றும் சிறந்த மன நிலையுமுடையவராக இருத்தல் வேண்டும்.

iii. 2023.11.13 ஆம் திகதியில் 18 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

iv. விண்ணப்பதாரி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதிக்கு அதாவது 2023.11.13 ஆம் திகதிக்கு முன் அண்மித்த 03 வருட கால எல்லை சபரகமுவ மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். (நேர்முகப் பரீட்சையின்போது தமது நிரந்தர வதிவை அத்தாட்சிப்படுத்துவதற்காக கிராம சேவை அலுவலரின் சான்றிதழ் அல்லது தொடர்புடைய ஏனைய ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.) அதேபோன்று விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதிக்குமுன் விவாகமாகி வேறு மாகாணமொன்றிலிருந்து இம்மாகாணத்திற்கு வந்துள்ள விண்ணப்பதாரிகள் இருப்பார்களாயின் அவர்கள் தமது விவாகச் சான்றிதழையும் கணவரின் அல்லது மனைவியின் நிரந்தர வதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

**கவனிக்கவும்** : தமிழ் மொழிமூல பதவி வெற்றிடங்களுக்காக நாடுதழுவிய வகையில் விண்ணப்பிக்கும் ஏனைய மாகாண விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் இந்த நிபந்தனை ஏற்புடையதாக இருக்கமாட்டாது.

v. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏறறுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தில் பதவியில் சேர்த்துக் கொள்வதற்காக தேவையாகும் அனைத்துத் தகைமைகளும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

2). **கல்வித் தகைமைகள் :-**

i. 2023.11.13 ஆம் திகதியில் கற்பிக்கும் பணிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட விசேடமான துறைகளுக்கு உட்பட்ட, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (உள்நாட்டு/வெளிநாட்டு) பல்கலைக் கழகமொன்றின் மூலம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமளிக்கும் நிறுவனமொன்றின் மூலம் வழங்கப்படுகின்ற பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் அந்த பட்டப்படிப்பில் கற்றுள்ள பிரதான பாடங்களுக்கு ஏற்புடையதாக ஒவ்வொரு பாடத்துக்காகவும் இவ்வறிவித்தலின் 1 ஆம் இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றிருப்பது கட்டாயமாகும்.

ii. கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களில் (பொதுவான ஆங்கில மற்றும் பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

iii. கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு தாய்மொழி மற்றும் கணிதம் உட்பட 03 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மிக முக்கியம் :-** விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யும்போது பின்வரும் காரணங்களை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

❖ தாம் பெற்றுள்ள பட்டத்தின்படி விண்ணப்பிக்க இயன்ற பாடங்கள் தொடர்பில் விண்ணப்பதாரிகள் கவனம் செலுத்தல் வேண்டும்.

❖ பட்டத்துக்காக படித்துள்ள பிரதான பாடத்தின்/பாடங்களின்படி மாத்திரம் தொடர்புடைய ஆசிரியர் பதவி வெற்றிடங்களுக்காக விண்ணப்பித்தல் வேண்டும். அதன்படி விண்ணப்பிக்கின்ற ஒவ்வொரு பட்டதாரியும் 17/1597/742/027 இலக்கமும் 2017.08.29 திகதியுமுடைய அமைச்சரவைத் தீர்மானங்களின்படி கற்பிப்பதற்குரிய பாடம் பட்டத்துக்காக படித்த முழுப் பாடத் தொகுதியின் மூன்றிலொரு (1/3) பகுதியை பூரணப்படுத்தியவர்களாக இருத்தல் வேண்டும்.

❖ பட்டம் தொடர்பில் விபரங்கள் அடங்கிய பெறுபேற்று ஆவணத்தில் பாடத் தொகுதியைக் குறிப்பிட்டு இல்லாதிருந்தால், அது தொடர்புடைய பல்கலைக் கழகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டு அந்த ஆவணத்தை பொது நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

❖ பட்டத்தின் பாடத் தொகுதி தொடர்பில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கான இறுதித் தீர்மானம் சபரகமுவ மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்ப மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் மேற்கொள்ளப்படும்.

❖ இரண்டு (02)பாடங்களுக்காக மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

❖ விண்ணப்பித்த பாடத்தை/பாடங்களை எவ்வித காரணத்தினாலும் மாற்றம் செய்ய இடமளிக்ககப்பட மாட்டாது.

3). **ஆட்சேர்ப்பு முறை :-**

3:1 பாடசாலைகள் அடிப்படை முறையின் கீழ் 1 ஆம் இலக்க அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாடத்துறைகளுக்கு ஏற்புடையதாக மாத்திரம் விடயம்சார்ந்ததாக இந்த ஆட்சேர்த்தல் நடத்தப்படும்.

3:2. ஒவ்வொரு பாடத்துக்காகவும் கிடைத்துள்ள தகைமைகள் அடங்கிய விண்ணப்பங்களின் எண்ணிக்கையின்படி திறந்த போட்டிப் பரீட்சையொன்றை நடத்தி தகைமையுடையவர்களை தேர்ந்தெடுத்துக் கொள்வதா அல்லது பொதுவான நேர்முகப் பரீட்சையொன்றையும் செய்முறைப் பரீட்சையொன்றையும் நடத்துவதன் மூலம் மாத்திரம் தகைமையுடையவர்களை தேர்ந்தெடுத்துக் கொள்வதா என்பதைப் பற்றி சபரகமுவ மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்ப மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

3.3 ஒவ்வொரு பாடத்துக்காகவும் கிடைத்துள்ள தகைமைகள் அடங்கிய விண்ணப்பங்களின் எண்ணிக்கையின்படி போட்டிப் பரீட்சை நடத்தாமல் இருக்கும் சந்தர்ப்பமொன்றில், சபரகமுவ மாகாண கல்வி, தகவல் தொழிலநுட்ப மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் நியமனம் செய்யப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் மூலம் சாதாரண நேர்முகப் பரீட்சையொன்றையும், செய்முறைப் பரீட்சையொன்றையும் நடத்தி அந்த செய்முறைப் பரீட்சையில் அவர்கள் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் உயர் அளவின்படி நிலவுகின்ற ஆசிரியர் பதவி வெற்றிடங்களுக்காக பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு நியமனங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக தகைமையுள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

3:4. ஒவ்வொரு பாடத்துக்காகவும் கிடைத்துள்ள தகைமைகள் அடங்கிய விண்ணப்பங்களின் எண்ணிக்கையின்படி போட்டிப் பரீட்சை நடத்தும் சந்தர்ப்பமொன்றில் இந்த அறிவித்தலின் இலக்கம் 1 மற்றும் 2 இன் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு நியமன அதிகாரியினால் பணிப்பிடப்படும் வகையில் பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களால் அல்லது சபரகமுவ மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அல்லது அதிகாரமளிக்கப்படும் ஏனையவொரு நிறுவனத்தினால் தகைமையுடையவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக எழுத்து மூலமான பரீட்சையொன்று நடத்தப்படும். அந்த எழுத்து மூலமான பரீட்சையின் எல்லா வினாப் பத்திரங்களுக்கும் விடை எழுதி அந்த ஒவ்வொரு வினாப் பத்திரத்திற்கும் ஆகக் குறைந்தது 40%

புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கையின் உயர் அளவின்படி நிலவுகின்ற பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையைப்போன்று 1.25 மடங்கு அளவான விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையொன்றில் கலந்துகொள்ளச் செய்யப்படுவார்கள். அந்த நேர்முகப் பரீட்சையில் சபரகமுவ மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்ப மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் நியமனம் செய்யப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையொன்றினால் விண்ணப்பதாரிகள் சாதாரண நேர்முகப் பரீட்சையொன்றுக்கும் செய்முறைப் பரீட்சையொன்றுக்கும் அழைக்கப்படுவார்கள். செய்முறைப் பரீட்சையில் அவர்கள் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளினதும், எழுத்து மூலப் போடடிப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளினதும் மொத்த எண்ணிக்கையின் உயர் அளவின்படி நிலவுகின்ற ஆசிரியர் பதவி வெற்றிடங்களுக்காக பாடசாலைகளுக்கு நியமனங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக தகைமையுடையவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

3.5 **<u>சாதாரண நேர்முகப் பரீட்சை</u>** :- ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொள்வதற்கான இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதைச் சோதிப்பதற்காகவும், உடல் ரீதியிலும் மனநிலை ரீதியிலும் அவர்கள் தகைமையுடையவர்களா என்பதை பரிசோதித்துப் பார்ப்பதற்காகவும் இந்த சாதாரண நேர்முகப் பரீட்சை நடத்தப்படும். சாதாரண நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

3.6 **<u>செய்முறைப் பரீட்சை :-</u>** ஆசிரியர் சேவையில் முக்கியமாகின்ற கற்கை கற்பித்தல் செயல்பாடு தொடர்பில் விண்ணப்பதாரியின் திறமைகளை அளவிடுவதற்காக இப்பரீட்சை நடத்தப்படும். விண்ணப்பதாரி நியமனம் பெற்றுக் கொள்வதற்கு எதிர்ப்பார்க்கும் பாடம் தொடர்பில் அறிந்து கொள்ளப்பட்ட தலையங்கமொன்றின் கீழ் 05 நிமிடங்களுக்குக் குறையாத அறிமுக உரையொன்றை செய்முறைப் பரீட்சையின்போது நிகழ்த்த வேண்டும். செய்முறைப் பரீட்சையில் பின்வரும் தீர்மானக் காரணிகளின்படி புள்ளிகள் வழங்கப்படும்.

| தொடர் இல. | செய்முறைப் பரீட்சையின்போது புள்ளிகளை வழங்கும் தீர்ப்புக் காரணிகள் | ஆகக் கூடிய புள்ளிகளின் அளவு | சித்தியடைவதற்குத் தேவையான ஆகக் குறைந்த புள்ளிகளின் அளவு |
|---|---|---|---|
| 1 | குறிக்கோள் மற்றும் பிரவேசித்தல் | 05 | 02 |
| 2 | ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு | 05 | 02 |
| 3 | தொடர்பாடலின் தெளிவு | 05 | 02 |
| 4 | நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 5 | முன்வைக்கும் நுட்ப முறைகளை உபயோகித்தல் | 05 | 02 |
| | மொத்தப் புள்ளிகளின் அளவு | 25 | 10 |

3.7. அதன்படி சபரகமுவ மாகாணத்தின் மாகாண சபைப் பாடசாலைகளில் நிலவுகின்ற, இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள 1 ஆம் இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிட பாங்களுக்காக மாத்திரம் பாடசாலைகள் அடிப்படையில் இந்த ஆட்சேர்த்தல் நடத்தப்படும். அதற்கு ஏற்புடைய பாடசாலைப் பதவி வெற்றிட ஆவணம் நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதற்கு முன் பகிரங்கப்படுத்தப்படும். அல்லது நேர்முகப் பரீட்சையின்போது காட்சியளிக்கச் செய்யப்படும். மேற்கூறிய பதவி வெற்றிட ஆவணத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நியமனங்கள் வழங்கப்படும். அதிபர்களனால் விண்ணப்பதாரிகளிடம் கொடுக்கப்படும் கடிதங்கள் நிராகரிக்கப்படும்

3.8.அவ்வாறு பகிரங்கப்படுத்தப்படுகின்ற பாடசாலைப் பதவி வெற்றிட ஆவணத்தின்படி, விண்ணப்பதாரிகளினால் பதவி வெற்றிடங்கள் இருக்கின்ற பாடசாலைகளுக்காக நியமனங்களைப் பெற்றுக் கொள்வதற்கு உள்ள சுய விருப்பத்தைத் தொடர் அடிப்படையில் நேர்முகப் பரீட்சையின்போது தெரிவித்தல் வேண்டும்.

3.9.நிலவுகின்ற பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை, போட்டிப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் அளவு மற்றும்/அல்லது செய்முறைப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் அளவு ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டே இந்த நியமனங்கள் வழங்கப்படும். அத்துடன் பாடசாலைகளுக்காக விருப்பம் குறிப்பிடுவது, நியமனமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான தகைமையொன்றாகக் கருதப்பட மாட்டாது.

3.10. நிலவுகின்ற விடயம்சார்ந்த ஆசிரியர் பதவி வெற்றிடங்களுள்ள பாடசாலைகளின் அடிப்படையில் நியமனங்களை வழங்குவதற்கு தகைமையுடையவர்களை தேர்ந்தெடுக்கும்போது ஒரு வெற்றிடத்துக்காக பல விண்ணப்பதரிகள் விண்ணப்பிக்கும் சந்தர்ப்பமொன்றில் அங்கு அந்த விண்ணப்பதாரிகள் போட்டிப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அளவு மற்றும்/அல்லது செய்முறைப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அளவு கவனிக்கப்படும். ஒரு பதவி வெற்றிடத்துக்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் பலர் சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள சந்தர்ப்பமொன்றில் தொடர்புடைய பாடசாலைக்கு உள்ள அண்மை தொடர்பில் முன்னுரிமை வழங்கப்படும். அந்த காரணியின்படி, தகைமை பெறும் விண்ணப்பதாரிகள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

3.11. பகிரங்கப்படுத்தப்படுகின்ற பாடசாலைப் பதவி வெற்றிட ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் அத்தியாவசிய பதவி வெற்றிடமொன்றைப் பூரணப்படுத்த இயலாதிலாதிருக்கும் சந்தர்ப்பமொன்றில், ஆட்சேர்ப்பு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்த ஏனைய விண்ணப்பதாரிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும். அங்கு விண்ணப்பதரி தொடர்புடைய பதவி வெற்றிடம் இருக்கின்ற பாடசாலைக்காக விண்ணப்பிக்காமல் இருந்தாலும், ஆட்சேர்ப்பு நிபந்தனைகளை மீறாதவாதவாறு பெற்றுக் கொண்டுள்ள புள்ளிகளின் அளவின்படி ஆட்சேர்த்துக் கொள்ளப்படும். எவ்வாறாயினும் இதன் கீழ் எடுக்கப்படுகின்ற பாடசாலைப் பதவி வெற்றிட தேர்ந்தெடுக்கும் பணிகள் சபரகமுவ மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்ப மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் ஆலோசனைகளின்படி மேற்கொள்ளப்படும்.

3.12. 27/88 இலக்கமுடைய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின்படி நியமனம் வழங்கும்போது நிலவுகின்ற பதவி வெற்றிடங்களின் 3% ஐ விசேட தேவைப்பாடுகளுடையவர்களுக்காக (வலது குறைபாடுடைய) ஒதுக்கப்படும். நியமனங்களுக்காக தேர்ந்தெடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் தொடர்புடைய பதவியில் பணியாற்றுவதற்கு தமது விசேட தேவை நிலை (வலது குறைபாட்டு நிலை) தடையொன்றாக இருக்க மாட்டாது என்பதை விசேட மருத்துவச் சோதனையொன்றின் மூலம் உறுதிபடுத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் விசேட தேவையுள்ள விண்ணப்பதாரியொருவர் நியமனம் பெற்றுக் கொள்வதற்காக தகைமை பெற வேண்டுமாயின் எழுத்துமூல பரீட்சையிலும் செய்முறைப் பரீட்சையிலும் குறிப்பிட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

3.13. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுள் ஒன்றை அல்லது சிலவற்றை இல்லாத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட மாட்டார்கள். நேர்முகப் பரீட்சைக்காக குறிப்பிட்ட தினத்தில் சமுகமளிக்காத விண்ணப்பதாரிகள் தொடர்பில் எவ்வித கவனமும் செலுத்தப்பட மாட்டாது. அதேபோன்று நேர்முகப் பரீட்சை தினத்தில் அனைத்து சான்றிதழ்களும் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் பின்பு சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4). <u>சேவை நிபந்தனைகள் :-</u>

4.1. அரசாங்க/மாகாண அரசாங்க சேவையின் நியமனங்களை நிருவகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்புகளில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அந்தப் பிரமாணக் குறிப்புகளில் செய்யப்பட்டுள்ள அல்லது இதன்பின் செய்யப்படும் திருத்தங்களுக்கும் இணங்க தேர்ந்தெடுக்கப்படுகின்ற பட்டதாரிகள் சபரகமுவ மாகாண அரசாங்க சேவையின் இலங்கை ஆசிரியர் சேவையின் 3-1(அ) தரத்திற்கு நியமனம் செய்யப்படுவார்கள்.

4.2. இந்த நியமனம் நிரந்தரமானது, ஓய்வூதியமுடையது. ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நியமனம் பெறுபவர்கள் உடன்படுதல் வேண்டும்.

4.3. இப்பதவிக்கு நியமனம் செய்யப்படுபவர்கள் 03 வருட கால எல்லைக்கு தகுதிகாண் நிலையில் வைக்கப்படுவார்கள்.

4.4. 2014.10.23 ஆம் திகதியுடைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1885/38 ஆம் இலக்கமுடைய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் 7.2.3.4 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி ஆட்சேர்ப்பு நடத்தப்படுவதுடன் பதவி உயர்த்தல்கள் இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்புகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும். அதேபோன்று இந்த செய்தித்தாள் அறிவித்தலில் அடங்காத ஏதாவதொரு தகவல் இருக்குமாயின், அந்த சந்தர்ப்பம் இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணக்கமாக இருத்தல் வேண்டும்.

4.5. நியமனம் பெறும் ஒவ்வொருவரும் 18/2020 இலக்கமும் 2020.10.16 ஆம் திகதியுடைய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுளின்படியும் இடைக்கிடையே அதில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களின்படியும் இரண்டாம் அரச கரும மொழி தொடர்பில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

4.6. இந்த ஆட்சேர்த்தல் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படுகின்றமையினால் ஒவ்வொருவரும் முதல் நியமனம் பெறும் பாடசாலையில் தொடர்ச்சியாக ஆகக் குறைந்தது 08 வருடங்கள் கட்டாயமாக பணியாற்றுதல் வேண்டும். அத்துடன் அக்கால எல்லைக்குள் இடமாற்றங்களைப் பெற்றுக் கொள்வதற்கு உரிமைகள் இருக்க மாட்டாது.

5). **<u>சம்பள அளவுத்திட்டம் :-</u>**

இப் பதவிக்குரிய மாதாந்தச் சம்பள அளவுத்திட்டமான, 2022.01.05 ஆம் திகதியும் 03/2016(iv) இலக்கமும் உடைய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக இருக்கும். அத்துடன் இந்த நியமனத்திற்குரிய சம்பளத் திட்டமானது, ஜீஈ-1-2016-ஏ இலக்கமுடைய சம்பளத் தொகுதியின் கீழ் மாதாந்தம் 31,490-6x445-7x525-2x600 - 39,035/- ரூபா ஆகும். பட்டதாரிகள் இச் சம்பள அளவுத்திட்டத்தின் 14 ஆம் படியான 37,835/- ரூபா மாதாந்தச் சம்பளத்தில் வைக்கப்படுவார்கள். இதற்கு மேலதிகமாக அரசாங்க

6). **<u>விண்ணப்பத்தை நிரப்புவற்கான அறிவுரைகள் :-</u>**

6.1. ஒரு விண்ணப்பதாரிக்கு தனது கல்வித் தகைமைகளின்படியும் விருப்பத்தின்படியும் பதவி வெற்றிடமான 02 பாடங்களுக்காக மாத்திரம் விண்ணப்பிக்க முடியும். நியமனங்களைப் பெற்றுக் கொடுக்கும்போது பதவி வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ள தொடர் அடிப்படையை கவனத்திற் கொள்ளப்படும்.

6:2. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தனது விண்ணப்பத்துடன் தன்னால் உறுதி செய்யப்பட்ட பின்வரும் ஆவணங்களை இணைத்திருத்தல் வேண்டும்.

i. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட க.பொ.த. (சா.தர.) பரீட்சையினதும் க.பொ.த (உ.தர) பரீட்சையினதும் பெறுபேற்று ஆவணங்களின் பிரதிகள்.

ii. பட்டப்படிப்புச் சான்றிதழின் (Degree Certificate) பிரதி.

iii. ஆரம்பப் பட்டத்திற்கு ஏற்புடைய விபரங்கள் அடங்கிய சான்றிதழின் (Detail Certificate/Acadamic Transcript) பிரதி.

(பட்டப் பாடநெறிக்கு ஏற்புடையதாக கற்றுள்ள பாடங்களின் தொகுப்பை உறுதி செய்து கொள்வதற்காக)

iv. தேசிய அடையாள அட்டையின் பிரதி.

v. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியில் அதாவது 2023.11.13 ஆம் திகதிக்கு முன் அண்மித்த 03 வருட கால எல்லை சபரகமுவ மாகாணத்தில் நிரந்தர வதிவுடையவராக இருக்கிறார் என்பதை உறுதி செய்யும் கிராம அலுவலரின் சான்றிதழ். (விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு முன் விவாகமாகி வேறு மாகாணமொன்றிலிருந்து இம்மாகாணத்திற்கு வந்திருக்கும் விண்ணப்பதாரிகள் இருப்பார்களாயின் அவர்கள் தமது விவாக சான்றிதழின் பிரதியொன்றையும் தனது வாழ்க்கைத் துணையின் (கணவரின் அல்லது மனைவியின்) நிரந்தர வதிவுச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.)

கவனிக்கவும்:- நாடுதழுவிய அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள தமிழ் மொழி மூல பதவி வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்கின்ற ஏனைய மாகாணங்களில் நிரந்தர வதிவுடைய விண்ணப்பதாரிகள் தாம் வசிக்கும் பிரதேசத்தின் கிராம அலுவலரால் வழங்கப்படும் வதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

6.3. விண்ணப்பத்தை நிரப்பும்போது 1 ஆம் இலக்க அட்டவணைகளைப் பின்பற்றவும். அலுவலக உபயோகத்திற்காகவுள்ள தொடர்புடைய கூட்டில் எதுவும் எழுதாமல் சபரகமுவ மாகாண கல்வி அமைச்சின் உபயோகத்திற்காக வெறுமையாக வைக்கவும்.

6.4. தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் விண்ணப்பத்தின் 13 ஆம் இலக்க தலைப்பின் கீழ் தமது திணைக்களத் தலைவரினால் கட்டாயமாக உறுதி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

6.5. கட்புல, செவிப்புல குறைபாடுடைய அல்லது ஏனைய விசேட தேவைப்பாடுகளுடுடைய விண்ணப்பதாரிகள் தமது குறைபாட்டு நிலைமையை விண்ணப்பத்தில் இடது பக்க மேல் மூலையில் சிவப்பு நிறத்தில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

## 7). <u>விண்ணப்பிக்கும் முறை :-</u>

7.1. A4 அளவிலான தாள்களின் இரு பக்கங்களையும் உபயோகித்து இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக விண்ணப்பங்களை ஒழுங்கு செய்தல் வேண்டும். விண்ணப்பத்தின் 01 தொடக்கம் 8.6 வரையிலான பந்திகளை முதற் பக்கத்திலும் எஞ்சிய தகவல்களை இரண்டாம் பக்கத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். தொடர்புடைய மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக இல்லாத, அத்துடன் எல்லா வகையிலும் பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றை தன்னிடம் வைத்துக் கொள்ளவது பிரயோசனமாகலாம்) சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள படிவத்திற்கு அமைவாக சமர்ப்பிப்பது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். அதேபோன்று விண்ணப்பத்ததை ஒழுங்கு செய்யும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படுவது கட்டாயமாகும்.

7.2. ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பத்தை மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்துள்ளமை பற்றி விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்பட மாட்டாது. அஞ்சலில் காணாமல் போகும் அல்லது தாமதமாகும் விண்ணப்பங்கள் தொடர்பிலான எவ்வித முறைப்பாடும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பித்த பாடத்தை பின்னர் எவ்வித காரணம் கொண்டும் மாற்றம் செய்யப்பட மாட்டாது. அத்துடன் அது தொடர்பில் சமர்ப்பிக்கப்படுகின்ற எவ்வித மேன்முறையீடும் கவனிக்கப்பட மாட்டாது. அதேபோன்று பட்டத்துக்காக படித்துள்ள பிரதான பாடத்தின் கீழ் 1 ஆம் இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடன் மாத்திரம் விண்ணப்பித்தல் வேண்டும். அத்துடன் நியமனம் பெறும் பாடசாலை அல்லது நியமனப் பாடம் எவ்வித காரணம் கொண்டும் மாற்றப்பட மாட்டாது.

7.3. விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்ததை அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர் ஒருவரால்/ சமாதான நீதிவான் ஒருவரால்/ சத்திய ஆணையாளர் ஒருவரால் / சட்டத்தரணி ஒருவரால்/ பிரசித்தி பெற்ற நொத்தாரிசு ஒருவரால் / முப்படையின் அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவரால் / பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அலுவலர் ஒருவரால் /நாடுதழுவிய சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரால் அல்லது 498,960 ரூபா அல்லது அதனிலும் கூடிய அடிப்படை வருடாந்த சம்பளமொன்றைப் பெறும் அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் அல்லது பதவி நிலை தரத்தில் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரால் அத்தாட்சிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

7.4. சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2023.11.13 திகதி அல்லது அதற்கு முன் ‘‘செயலாளர், கல்வி தகவல் தொழில்நுட்ப மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, சபரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி’’ என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘‘சபரகமுவ மகாண ஆசிரியர் பதவி வெற்றிடங்களுக்காக (க.பொ.த. (உ.தர)) விண்ணப்பித்தல் - 2023’’ என கட்டாயமாக குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

## 8). <u>பரீட்சைத் திட்டம் : -</u>

8.1 இவ்வறிவித்தலின் 1 ஆம் 2 ஆம் நிபந்தனைகளின்படி தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களால் அல்லது சபரகமுவ மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏனையவொரு நிறுவனத்தினால் பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும். விண்ணப்பதாரி அதில் தனது கையொப்பத்தை அத்தாட்சிப் படுத்திக் கொள்ளல் வேண்டும். அத்துடன் பரீட்சைக்கு சமுகமளிக்கும் முதல் நாளில் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தனது அனுமதிப் பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்படாத எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரியிடம் அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்டவுடன் அதைப்பற்றி குறிப்பிட்டு அறிவித்தலொன்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் அல்லது

சபரகமுவ மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏனையவொரு நிறுவனத்தினால் அல்லது சபரகமுவ மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்ப மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் விளம்பரம் செய்யப்படும்.

8.2. விண்ணப்பதாரி தமக்கு நியமிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சை நடத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்ளால் அல்லது சபரகமுவ மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏனையவொரு நிறுவனத்தினால் விதிக்கப்படுகின்ற சட்ட விதிகளுக்கு விண்ணப்பதாரி உடன்படுதல் வேண்டும். அந்த சட்ட விதிகளை மீறும் சந்தர்ப்பத்தில் தொடர்புடைய நிறுவனத்தினால் விதிக்கப்படும் தண்டணையொன்றுக்கு ஆளாவதற்கு விண்ணப்பதாரிக்கு நேரிடும்.

8.3. பரீட்சை நிலையத்தில் விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் உறுதி செய்வதற்காக அங்கீகரிக்கப்படுவது, ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவைச் சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் மாத்திரம் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

8.4 இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய ஊடக மொழிகளின் மூலம் மாத்திரம் நடத்தப்படும். பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஊடக மொழியை பின்பு மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

8.5 அதன்படி பரீட்சை கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும். இவ்விரண்டு வினாப்பத்திரங்களும் பல்தேர்வு மற்றும் சுருக்க விடைகளை எதிர்ப்பார்க்கும் வினாக்கைகைக் கொண்டிருக்கும்.

01. **நுண்ணறிவுப் பரீட்சை** – நேரம் 01 மணித்தியாலம் (100 புள்ளிகள்)

விண்ணப்பதாரியின் ஆசிரியர் தொழிலுக்கான திறமைகள் மற்றும் தர்க்கிக்கும் ஆற்றல் தொடர்பான அறிவை அளவிடும் நோக்கமாக இவ்வினாப் பத்திரம் ஒழுங்கு செய்யப்படும். இது பல்தேர்வு மற்றும் சுருக்க விடைகளையளிக்க வேண்டிய 50 வினாக்களைக் கொண்டிருக்கும். அந்த எல்லா வினாக்களுக்கும் சுருக்க விடைகளையளித்தல் வேண்டும்.

02. **பொது அறிவு:-** நேரம் 01 மணித்தியாலம் (100 புள்ளிகள்)

இது ஆசிரியத் துறைக்கு ஏற்புடையதாக அத்துறை தொடர்பில் விண்ணப்பதாரியிடம் உள்ள பொது அறிவு மற்றும்/அல்லது உள்நாட்டு ரீதியில் ஏற்பட்டுள்ள அதேபோன்று ஏற்படுகின்ற கல்வி முன்னேற்றங்கள் தொடர்பிலான பொது அறிவு மற்றும் கல்வி நவீனமயப்படுத்தல் தொடர்பில் அறிவை பரிசோதிக்கும் பல்தேர்வு மற்றும் சுருக்க விடைகளை எதிர்ப்பார்க்கும் 50 வினாக்கள் அடங்கிய வினாப்பத்திரமொன்றாகும். அந்த எல்லா வினாக்களுக்கும் விடைகளையளித்தல் வேண்டும்.

8.6 இந் எழுத்து மூலப் பரீட்சையில் சித்தி பெறுவதற்காக ஒவ்வொரு வினாத்தாளுக்காவும் ஆகக் குறைந்தது 40 புள்ளிகள் அல்லது அதனிலும் கூடிய புள்ளிகளைப் பெற்று இரு பாடங்களிலும் சித்தி பெறுதல் வேண்டும். அவ்வாறு புள்ளி பெற்றவர்களின் முன்னுரிமை ஆவணமொன்றை ஒழுங்கு செய்து பரீட்சைஆணையாளர் நாயகத்தினால் அல்லது சபரகமுவ மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அல்லது அதிகாரம் பெற்ற ஏனையவொரு நிறுவனத்தினால் சபரகமுவ மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்ப மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரிடம் பெற்றுக் கொடுக்கப்படும்.

9). **<u>பரீட்சைக் கட்டணம் :-</u>**

பரீட்சைக் கட்டணம் 1200/- ஆகும். இப்பரீட்சைக் கட்டணம் எவ்வித காரணம் கொண்டும் மீள செலுத்தப்பட மாட்டாது.

i. சபரகமுவ மாகாணத்திற்குள் விண்ணப்பதாரிகள் இப் பரீட்சைக் கட்டணத்தை சபரகமுவ மாகாண சபையின் 20.03.02.99 ஆம் இலக்க வருமானத் தலைப்பிற்கு வரவாகும் வகையில் சபரகமுவ மாகாண சபையின் ஏதாவதொரு அமைச்சின் அலுவலகத்திற்கு/திணைக்களத்திற்கு (உள்ளூராட்சி நிறுவனங்கள் தவிர்ந்த) அல்லது ஏதாவதொரு பிரதேச செயலகத்திற்குச் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டை விண்ணப்பத்தில் குறிப்பிட்ட இடத்தில் ஒட்டி அந்த பற்றுச் சீட்டின் இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்புல் வேண்டும். (பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தன்னிடம் வைத்துக் கொள்வது பிரயோசனமுடையதாகும்).

ii. தமிழ் மொழி மூல பதவி வெற்றிடங்களுக்காக நாடு தழுவிய அடிப்படையில் விண்ணப்பிக்கின்ற ஏனைய மாகாணங்களின் விண்ணப்பதாரிகள், இரத்தினபுரி அஞ்சல் அலுவலகத்தில் பணம் மாற்றிக் கொள்ளக்கூடிய வகையில் ஏதாவதொரு அஞ்சல் அலுவலகத்தின் மூலம் "செயலாளர், சபரகமுவ மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்ப மற்றும் கலாசார அலுவல்கள் அமைசசு" என்ற பெயரில் பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட காசுக் கட்டளையை (Money Oder) விண்ணப்பத்தில் குறிப்பிட்ட இடத்தில் ஒட்டி அந்த காசுக்கட்டளையின் இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். (காசுக்கட்டளையின் நிழற்படப் பரதியொன்றை தன்னிடம் வைத்துக் கொள்வது பிரயோசனமாகலாம்).

10). **<u>பரீட்சை நிலையங்கள் :-</u>**

இப்பரீட்சை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் நடத்தப்படும். பரீட்சை நடைபெறும் திகதி பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களால் அல்லது சபரகமுவ மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏனையவொரு நிறுவனத்தினால் பின்பு அறிவிக்கப்படும்.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| இரத்தினபுரி | 01 |
| கேகாலை | 02 |

11). எவரானுமொரு விண்ணப்பதாரி தகைமையற்றவர் என நியமனம் செய்வதற்கு முன் அறிந்து கொள்ளப்பட்டால் அவரது விண்ணப்பம் எவ்வித காரணமும் காட்டாமல் நிராகரிக்கப்படும். மேலும் குறிப்பிட்ட தகைமைகள் பற்றி அறிந்து கொண்டோ அல்லது வேண்டுமென்றே பொய்யான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை பற்றி அல்லது சரியான தகவல்களை மறைத்து உள்ளமை பற்றி நியமனம் பெற்ற பின்பும் அறியப்பட்டால் அல்லது நியமனம் பெறுவதற்காக தகைமையற்றவரென தெரிய வந்தால் உடனடியாக அரச சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படும்/சேவை முடிவடையச் செய்யப்படும்.

12). 1 ஆம் இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளுக்கு ஏற்புடையதாக மாத்திரம் இவ்வறிவித்தல் மூலம் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. ஆகையினால் இவ்வறிவித்தலுக்கு ஏற்புடையதாக விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பது, பாடசாலைகளுக்காக விருப்பம் குறிப்பது,

தொடர்புடைய போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுதல், அல்லது அதில் சித்தி பெறுவதல், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுதல், அல்லது அதற்குச் சமுகமளித்தல் ஆகிய எவ்வித காரணமும் அல்லது ஏனையவொரு காரணமும் சபரகமுவ மாகாண அரசாங்க சேவையின் இலங்கை ஆசிரியர் சேவையின் நியமனமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையாகவோ அல்லது சட்ட ரீதியான உரிமையாகவோ இருக்க மாட்டாது.

13). 13). இவ்வறிவித்தலில் அடங்காத ஏதாவதொரு தகவல் இருக்குமாயின் அது தொடர்பில் தீர்மானிக்கும் உரிமையும், பதவி வெற்றிடங்களின் ஒரு பகுதியை அல்லது அவற்றை முழுமையாக நிரப்புதல் அல்லது நிரப்பாதிருத்தல் தொடர்பில் இறுதித் தீர்மானமெடுக்கும் உரிமையும் சபரகமுவ மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்ப மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் சார்பில் இருக்கும்.

14). சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்ற இவ்வறிவித்தலின் உரைகளுக்கிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூல உரையே சரியானதாகக் கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பி.ஏ.ஸீ.பீ. பமுணுஆரச்சி,
செயலாளர்,
கல்வி, தகவல் தொழில்நுட்ப மற்றும்
கலாசார அலுவல்கள் அமைச்சு,
சபரகமுவ மாகாணம்

2023.10.13 ஆம் திகதி,
சபரகமுவ மாகாண சபை,
கல்வி, தகவல் தொழில்நுட்ப மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சில்.